

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து:** தொழிலாளர்களும் வேலையற்றோரும்: எல்லா தொழிலாளர்களும் அவர்களின் உரிமைகளுக்கு உரிய மரியாதையையும், பாதுகாப்பையும் பெறவும், வேலையற்றோர் பொது நலனுக்கு பங்களிக்கும் வாய்ப்பையும் பெறவும் வேண்டுமென்று

**அக்டோபர் மாத கரு : எல்லையற்ற சாட்சியம்**

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| அக் 22 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | மறைப்பரப்பு ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ) | மறைப்பரப்பு ஞாயிறு |
| | காலை 11.00 | திருப்பலி (ம) | மறைப்பரப்பு ஞாயிறு |
| | மாலை 6.00 | புகழாராதனை/ திருப்பலி (த) | புனித பிரான்சிஸ் அசிசி சிற்றாலயம், தாசேக் |
| அக் 23 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | கப்பெஸ்த்தரானோ நகர் புனித யோவான் |
| அக் 24 செவ் | மாலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித அந்தோணி மேரி கிளாரெட் |
| அக் 26 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள் |
| அக் 27 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள் |
| அக் 28 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித சைமன் & யூதா |
| அக் 29 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்காலம் 30ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | பொதுக்காலம் 30ஆம் ஞாயிறு |

## பங்கு நடவடிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| அக் 22 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | மதியம் 12.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |
| | மதியம் 12.15 ~ 12.45 | பெர். மை 2-1 | மறைக்கல்வி ஆசிரியர்கள் கூட்டம் |
| | மாலை 6.00 | பெர். மை 1-3 | மகளிர் குழு கூட்டம் |
| | மாலை 7.30 | ஆலயம் | கி.அ & அ.வே சிற்றாலய பாடல்குழு பயிற்சி |
| அக் 23 திங் | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| அக் 24 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு |
| அக் 25 புதன் | மாலை 8.00 | ஆலயம் | புனித அகஸ்டின் பாடல்குழு பயிற்சி (த) |
| அக் 26 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் வாசகர் பயிற்சி |
| | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| அக் 27 வெள் | மாலை 7.30 | ஆலயம் | பாடல்குழு (ஆ) |
| அக் 28 சனி | காலை 9.00 | பெர். மையம் | ஒருங்கிணைந்த இறையியல் கல்வி சான்றிதழ் 2 |
| | மாலை 5.30/ 6.00 | ஆலயம் | செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| அக் 29 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | மதியம் 12.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |
| | மதியம் 12.00 ~ 5.00 | பெர். மையம் | பங்கு மேய்ப்புப்பணி மாநாடு 2017 |

**நவம்பர் மாத திருமணங்கள் 2017**

நவ 4 மாலை 4.00 திருமணம் (த) நிக்சன் த/பெ சின்னப்பன் & ஜெனிபர் த/பெ சின்னப்பன்

நவ 11 மாலை 4.30 திருமணம் (த) கிளமெண்ட் ராஜ் பன்னீர் செல்வம் & ஜூவனித்தா ஜீவித்தா நுமுசு ராஜா

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

1. **தங்கும் விடுதி**: மசபியல் இல்லம் இப்போது தங்கும் விடுதியாக திறக்கப்பட்டுள்ளது. உங்கள் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அவர்களின் விடுமுறை நாட்களில் ஈப்போவில் தங்குவதற்காக மசபியல் இல்லத்தை பதிவு செய்யலாம். பதிவு கட்டணத்திற்காக விவரங்களை அறிய பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

2. **மறைக்கல்வி:** மறைக்கல்வி புதிய உருமாற்ற நிகழ்வை ஒட்டி, நமது குழந்தைகளுக்கு முகாம்களை தயார்படுத்தவும், கற்பிக்கவும் தன்னார்வலர்களாக இன்னும் அதிக மறைக்கல்வி ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். எங்களுக்கு மேலும் 20 லிருந்து 30 பேர் தேவைப்படுகின்றனர். தயவு செய்து ஆதரவு தர முன்வாருங்கள். ஆர்வமுள்ளோர் தொடர்புக்கு: எட்வர்ட் (012-5121722)/ சுரேஷ் (012-4146895) அல்லது உங்களது பெயர்களை பங்கு அலுவலகத்திலும் கொடுக்கலாம்.

3. **வேலைவாய்ப்பு:** பொது வேலையாள்கள் (3 நபர்கள்) ஈப்போ, கம்போங் சீமி முதியோர் இல்லத்திற்கு உடனடியாக தேவைப்படுகின்றனர். தொடர்புக்கு: எலிசியா யோங் (05-5473252/ 05-5452449)

4. **பங்கு மேய்ப்புப்பணி மாநாடு 2017**: நாள்: 29 அக் 2017 (ஞாயிறு) நேரம்: மதியம் 12.00 ~ மாலை 5.00 இடம்: பெர். மையம். பமேப குழுவால் நியமிக்கப்பட்ட அனைத்து அதிச மற்றும் பணிக்குழுக்கள் மற்றும் அனைத்து தலைவர்களும், துணைத் தலைவர்களும் இந்த பங்கு மாநாட்டிற்கு அழைக்கப்படுகிறீர்கள்.

5. **அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (தமிழ்):** 18 நவ 2017 (சனி) @ மாலை 4.30க்கு நடைபெறும். மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

6. **மரித்த விசுவாசிகளின் நினைவு:** திருப்பலிகள் 2 நவ 2017 (வியா) @ காலை 6.30(ஆ) மற்றும் தம்பூன் கல்லறையில் காலை 9.30க்கும்(ஆ) தொடர்ந்து கல்லறைகள் ஆசீர்வதித்தலும் நடைபெறும்.

7. **நோயாளர் ஆசீர்வாதம்:** அதிச தலைவர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் கவனத்திற்கு. தயவு செய்து இதை முக்கியமானதாக எடுத்துக்கொள்ளுங்கள். உங்களது அதிச மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆசீர்வாதம் தேவைப்பட்டால் உடனடியாக பங்கு குருவானவர்களிடம் தெரிவியுங்கள். கடைசி நிமிடம் வரை காத்திருக்க வேண்டாம்.

8. **இறந்தவர்களுக்கான புகழுரை**: அடக்க சடங்கு மற்றும் திருப்பலிக்கான அனைத்து புகழுரைகளும் குருவானவர்களின் கவனத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டும். உங்களின் புகழுரை ஒரு பக்கத்திற்குள் அடங்க வேண்டும். எழுத்துப்பூர்வமான ஒரு புகழுரை மட்டுமே வாசிப்பதற்கு அனுமதிக்கப்படும்.

9. **தயவு செய்து திருவழிப்பாட்டு நல்லொழுக்கத்தை கடைப்பிடியுங்கள்**: திருவழிப்பாட்டு கொண்டாட்டத்தில் மரியாதை குறைவாக நடப்பதை பார்க்கும் போது என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆலயத்தில் சிலர் இன்னும் கைப்பேசியை பயன்படுத்துகின்றனர். சிலர் நற்கருணை வழிப்பாட்டின் போது நடந்துக்கொண்டிருக்கின்றனர். சிலர் நற்கருணையை பெறும்போது "ஆமென்" என்றும் சொல்வதில்லை. சிலர் எடுத்துக்கொண்டு நடக்கின்றனர் ஆனால் உண்ணுவதில்லை. ஆலயத்தில் நாம் புனிதமாக இருக்க கற்றுக்கொள்ள வேண்டும் என நினைக்கிறேன்.

10. **எரிக்கப்பட்ட உடலின் சாம்பல் பகுதிகள்:** எரிக்கப்பட்ட எல்லா எஞ்சிய உடல் பகுதிகளும் ஆற்றில், கடலில் கரைக்க, குடும்ப உறுப்பினர்களிடையே பிரித்துக்கொள்ளவோ, உங்கள் வீட்டில் வைத்துக்கொள்ளவோ, அவர்களின் எலும்புகளை ஆபரணங்களாக செய்துக்கொள்ளவோ **அனுமதிக்கப்படாது**. இது கத்தோலிக்க விசுவாசத்திற்கு இணக்கமற்ற எதிரான செயலாகும்; **கத்தோலிக்க நடைமுறையும் அல்ல.** உடல்பகுதிகள் இறந்தோர் சாம்பலை வைக்க சுவற்றில் உள்ள அமைவுகளில் (Columbarium) **வைக்கவேண்டும்,** அல்லது கல்லறையில் புதைக்க வேண்டும் (உங்கள் தோட்டத்தில் அல்ல). இது உடலின் உயிர்ப்பை விசுவாசிக்கும் நோக்கமாகும். ஒருவேளை விசுவாசத்திற்கு எதிரான செயல்கள் இருந்தால், அடக்க சடங்குகள் மறுக்கப்படும்.

11. **தம்பூன் கல்லறையில் அடக்கம் செய்ய இடங்கள்:** தம்பூன் கல்லறையில் தற்போது சுமார் 1,000 இடங்களே உள்ளன. இவை சுமார் 10 ஆண்டுகளுக்கு போதுமானவை. நாம் வேறு இடங்களை தேடும் வேளையில், நாம் நமது பங்கு மக்களை தங்களின் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டிமார்களின் கல்லறைகளில் சாம்பல் துவாரங்களை இட ஊக்குவிக்கிறோம். இவ்வாறு செய்தால் தம்பூன் கல்லறையில் பயன்பாட்டை நீட்டிக்கலாம். ஒவ்வொரு கல்லறையிலும் நீங்கள் 6 துவாரங்கள் இட முடியும். தயவு செய்து சிந்தியுங்கள்!

12. **கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி செப்டம்பர் 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **343,785.15** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **350,888.10** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**15/10/17 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 1,196.30 **காலை 9.00** - RM 1,290.00 **முனிசிபல்** - RM 171.50

**மொத்தம்** - RM 2,657.80 **2017** - RM 740.00

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ என்று ஆங்கிலத்தில் எழுதவும்